**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>**

**முன்னிலை:-** திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.130/2022</u>**
**<u>CNR No. TNED13-005738-2022</u>**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
சிவகிரி காவல் நிலையம்,
(குற்ற எண்.198/2021) - குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

அர்ஜுணன், வயது 57/2021, த/பெ.குமாரசாமி,
15 வேட்டுவபாளையம்,
சிவகிரி அஞ்சல், ஈரோடு மாவட்டம். - எதிரி

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 24.10.2021 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 25.10.2021 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 02.11.2021 | காவல்நிலைய பிணையில் சென்ற நாள் 02.11.2021 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 04.07.2022 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 01.03.2023 | |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் | 1. கு.வி.மு.ச.பிரிவு 436ன் கீழான மனு சி.எம்.பி.எண்,.739/2023 உத்தரவு நாள் 13.03.2023 - அனுமதிக்கப்பட்டது | |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:26:32 +0530

<table>
<tr><td></td><td>செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">2. கு.வி.மு.ச.பிரிவு 294(3)ன் கீழான மனு எம்.பி.எண்.1/2025 உத்தரவு நாள் 22.09.2025 – அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="11">7.</td><td rowspan="11">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>14.08.2025</td><td>14.08.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>14.08.2025</td><td>14.08.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>14.08.2025</td><td>14.08.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>14.08.2025</td><td>14.08.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>15.09.2025</td><td>15.09.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>15.09.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>15.09.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>07.11.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">17.11.2025</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிமீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">– இல்லை –</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">02.03.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">27.03.2026</td></tr>
</table>

இவ்வழக்கு 29.12.2022ம் தேதி சி.சி.எண்130/2022 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, வழக்கு இறுதியாக 02.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.எஸ்.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.27 17:26:37 +0530

## தீர்ப்புரை

இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304–Aன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

1. **சிவகிரி காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

24.10.2021ம் தேதி மாலை 15.30 மணியளவில் சிவகிரி காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட சிவகிரி – முத்தூர் மெயின்ரோட்டில் எல்லை மாகாளியம்மன் கோயில் அருகில் இறந்துபோன வெண்ணிலா தனது மகன் பரமேஸ்வரன் என்பவர் TN 33 AF 5431 TVS XL SUPER என்ற வண்டியை ஓட்ட வெண்ணிலா பின்னால் அமர்ந்தும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று எல்லை மாகாளியம்மன் கோயில் அருகில் திரும்புவதற்காக நின்றிருந்தபோது எதிரி TN 86 C 9856 YAMAHA FASCINO என்ற வண்டியை மேற்கிலிருந்து கிழக்காக மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் விதமாக ஓட்டி சென்று முன்னால் நின்று கொண்டிருந்த TN 33 AF 5431 TVS XL SUPER வண்டியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியதில் பின்னால் அமர்ந்து சென்ற வெண்ணிலா என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக சிவகிரி காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **வழக்கை புலன் கொண்டு எதிரியை அழைத்தல்:**

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **எதிரியின் கோரிக்கை**:

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரிக்கு போதிய கால அவகாசம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:26:42 +0530

வழங்கப்பட்டு இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றம் குறித்து எதிரியிடம் வினவியபோது குற்றத்தை எதிரி மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக உத்தரவிடப்பட்டது.

4. <u>**வழக்கு விசாரணை**</u>:

அரசு தரப்பில் குறிப்பிட்டிருந்த பட்டியல் சாட்சிகளில் பட்டியல் சாட்சிகள் 6, 8, 10, 11, 12, 14, 15 ஆகிய 7 நபர்கள் தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

5. <u>**அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்**</u>:–

(I) **வழக்கின் புகார்தாரரான ஆறுமுகம் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில்** மார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் வேலைக்கு சென்றிந்தபோது தனது மகனும், மனைவி வெண்ணிலாவும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அவர்களுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், அதன் பேரில் தான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று தனது மகனையும், மனைவியையும் பார்த்ததாகவும், தனது மனைவிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், தனது மகன் மற்றும் மனைவி மீது ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டதாகவும், தனது மனைவி வெண்ணிலாவை மேல்சிகிச்சைக்காக சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்ததாகவும், தான் மருத்துவமனையில் இருந்த போது சிவகிரி போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் **அ.சா.அ.1 புகார் வாக்குமூலம்** வாங்கியதாகவும், சுமார் 4 நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தனது மனைவி வெண்ணிலா இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 பரமேஷ்வரன் தனது சாட்சியத்தில்** வெண்ணிலா தனது அம்மா என்றும், எதிரி தான் தாங்கள் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது தங்கள் மீது Yamaha

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:26:47 +0530

பைக்கை மோதி விபத்தை ஏற்படுத்தியவர் என்றும், 24.10.2021ம் தேதி TVS XL Super இருசக்கர வாகனத்தில் தானும் தனது அம்மா வெண்ணிலாவும் மகா காளியம்மன் கோவிலுக்கு சென்றதாகவும், தான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டுசென்றதாகவும், தனது அம்மா வெண்ணிலா தனக்கு பின்னால் அமர்ந்து வந்ததாகவும், அன்று மதியம் சுமார் 03.30 மணியளவில் முத்தூர் – சிவகிரி ரோட்டில் எல்லைகாளியம்மன் ரோட்டிற்கு எதிர்புறத்தில் ரோட்டை கடந்து செல்வதற்காக நின்றுகொண்டிருந்ததாகவும், மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி முத்தூர் ரோட்டில் எதிரி அர்ஜுனன் ஒரு Yamaha வண்டியில் வேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து தங்கள் மீது மோதிவிட்டதாகவும், அந்த Yamaha வண்டியின் எண். TN 86 C 9856 என்றும், தனக்கு கை, கால்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், தனது அம்மா வெண்ணிலாவிற்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டதாகவும், விபத்தை அங்கிருந்த தங்கவேல் மற்றும் சில நபர்களும் பார்த்தார்கள் என்றும், சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தனது அப்பா அ.சா.1 ஆறுமுகத்திற்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னார்கள் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் தானும் தனது அப்பா, அம்மாவுடன் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், தனது அம்மா வெண்ணிலாவிற்கு முதலுதவி சிகிச்சை முடித்து மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், மேலும் தனது அம்மா வெண்ணிலாவை சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக மருத்துவர்கள் அனுப்பிவைத்தார்கள் என்றும், சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் கழித்து தனது அம்மா வெண்ணிலா இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(iii) அ.சா.3 தங்கவேல் தனது சாட்சியத்தில்** 24.10.2021ம்தேதியன்று மதியம் 03.30 மணியளவில் எல்லை மகாகாளியம்மன் கோவில் அருகில் உள்ள தனது வீட்டில் இருந்ததாகவும், ஒரு XL இருசக்கர வாகனத்தில் அ.சா.2 பரமேஷ்வரனும், அவரது அம்மாவும் முத்தூர் போகும் ரோட்டில் கிழக்கு நோக்கி வந்தார்கள் என்றும், எதிரி ஒரு Yamaha வாகனத்தை கிழக்கு நோக்கி ஓட்டிவந்து மேற்சொன்ன பரமேஷ்வரன் மற்றும் அவரது அம்மா மீது மோதிவிட்டதாகவும். பரமேஷ்வரனுக்கு சிராய்ப்பு காயம் இருந்தது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:26:55 +0530

என்றும், அவரது அம்மாவிற்கு தலையில் அடிபட்டிருந்தது என்றும், தான் அடிபட்ட அந்த அம்மாவிற்கு தண்ணீர் கொடுத்து அவரது கணவருக்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(iv) அ.சா.4சூர்யபிரகாஷ் தனது சாட்சியத்தில்** பார்வைமகஜரில் முதலாவதாக காணப்படும் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், 26.10.2021ம் தேதியன்று ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக காலை 07.00 மணியளவில் சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் விபத்து நடந்த எல்லை மகாகாளியம்மன் கோவில் அருகில் வந்து விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் போட்டு எழுதிகொண்டார்கள் என்றும், அவர் எழுதிகொண்ட அந்த பார்வைமகஜரில் தானும் பழனிச்சாமி என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், **அ.சா.ஆ.2 பார்வை மகஜர்** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(v) **அ.சா.5 பிராங்கிளின் தனது சாட்சியத்தில்** 24.10.2021ம் தேதியன்று மாலை 03.30 மணியளவில் தான் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டுவிட்டு மீண்டும் அம்மன்கோவிலில் உள்ள தனது கடைக்கு வருவதற்காக திரும்பியதாகவும், அங்கு எல்லை மாகாளியம்மன் கோவில் உள்ளதாகவும், ரோட்டின் ஓரமாக ஒரு ஆண்நபரும், ஒரு பெண்மணியும் TVS XLலில் வந்து நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அந்த ரோடு முத்தூரில் இருந்து சிவகிரி செல்லும் சாலை என்றும், மேலும் அது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் சாலையாகும் என்றும், மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த ஒரு Yamaha Scooty இருசக்கர வாகனம் நல்ல ஸ்பீடாக வந்து ரோட்டில் நின்று கொண்டிருந்த அந்த பெண்மணிக்கு பின்புறமாக அடித்ததில் அந்த இரு நபர்களும் ரோட்டில் கீழே விழுந்து விட்டதாகவும், விபத்தின் போது அந்த பெண்மணிக்கு தலையில் பலத்த அடிபட்டு ரத்தம் வந்ததாகவும், அந்த பெண்மணியுடன் வந்த மற்றொரு ஆண் நபருக்கு உடலில் சிராய்பு காயம் இருந்ததாகவும், இருவரையும் ஒரு ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:00 +0530

(vi) **அ.சா.6 சண்முகசுந்தரம் தனது சாட்சியத்தில்** 24.10.2021ம் தேதியன்று தனது நண்பரின் மனைவி வெண்ணிலாவும், அவரது மகன் பரமேஷ்வரனும் ஒரு இருசக்கர வாகனத்தில் சிவகிரி – முத்தூர் ரோட்டில் உள்ள எல்லை மாகாளியம்மன் கோவில் செல்வதற்காக ரோட்டின் இடது புறமாக நின்றுகொண்டிருந்தபோது ஒரு Yamaha பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அடிபட்ட வெண்ணிலாவிற்கு தலையில் பலத்த காயம் இருந்ததாகவும், சுமார் 4 நாட்கள் கழித்து வெண்ணிலா சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(vii) **அ.சா.7 ஜெகநாதன் தனது சாட்சியத்தில்** 24.10.2021ம் தேதியன்று தனது நண்பரின் மனைவி வெண்ணிலாவும், அவரது மகன் பரமேஷ்வரனும் ஒரு இருசக்கர வாகனத்தில் சிவகிரி – முத்தூர் ரோட்டில் உள்ள எல்லைமாகாளியம்மன் கோவில் செல்வதற்காக ரோட்டின் இடது புறமாக நின்றுகொண்டிருந்தபோது ஒரு Yamaha பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அடிபட்ட வெண்ணிலாவிற்கு தலையில் பலத்த காயம் இருந்ததாகவும், சுமார் 4 நாட்கள் கழித்து வெண்ணிலா சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(viii) அ.சா.8 தமிழ்செல்வன் காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 24.10.2021ம் தேதியன்று சிவகிரி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பெண் காவலர் செல்வி.அசரப்நிஷா த.கா.2199 என்பவரை அனுப்பி அங்கு வெண்ணிலா என்பவரின் விபத்து பதிவேடு பெற்று அவர் மேல்சிகிச்சைக்காக மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக தெரியவந்து பெண் தலைமைக்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:05 +0530

காவலர் அங்கு சென்று காயம்பட்ட வெண்ணிலா என்பவர் மயக்க நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்ததால் அவரது கணவர் ஆறுமுகம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து தன் பார்வைக்கு வைத்ததாகவும், தான் மேற்படி புகார் வாக்குமூலத்தினை பார்வையிட்டு நிலைய குற்ற எண்.198/2021 இ.த.ச.பிரிவுகள் 279, 337ன் கீழ் **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூர்யபிரகாஷ் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்** தயார் செய்ததாகவும், சாட்சிகள் ஆறுமுகம், பரமேஸ்வரன், பிராங்கிளின், தங்கவேல், சூர்யபிரகாஷ் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், விபத்தின்போது எதிரி ஓட்டி வந்த வாகனமான யமாஹா பேசினோ TN 86 C 9856 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் தணிக்கைக்காக அனுப்பி வைத்ததாகவும், சேலம் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வெண்ணிலா இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் வழக்கினை இ.த.ச. பிரிவுகள் 279, 304-A ஆக பிரிவு மாற்றம் செய்து **அ.சா.ஆ.5 சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை-ஐ** நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெண்ணிலா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு **அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்ததாகவும், பிரேத விசாரணை சாட்சிகளான அருண்குமார், ஜெகநாதன், சரவணகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(ix) **அ.சா.9 முருகன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் பதிவு செய்து வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.198/2021 வழக்கில் முதல் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை தனது வசம் ஒப்படைந்திருந்ததை தான்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:17 +0530

விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விபத்தின்போது காயம்பட்ட சாட்சி அ.சா.2 பரமேஸ்வரன் ஓட்டி வந்த இருசக்கர வாகனமான TVS XL Super TN 33 AF 5431 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்தில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களையும் தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.கதிர்வேல் மற்றும் திரு.சிவக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாகனங்களின் தணிக்கை சான்றுகள் பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், **TN 86 C 9856 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.7** என்றும், விபத்தில் இறந்தபோன வெண்ணிலா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையை சேர்ந்த மகேஷ்குமார் என்பவரை விசாரித்து **அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை** பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வெண்ணிலாவின் கணவர் அ.சா.1 ஆறுமுகத்திடம் இருந்த புகார் வாக்குமூலம் பெற்று வந்த நிலை பெண் காவலர் செல்வி. அசரப் நிஷா என்பவரையும், பிரேத பரிசோதனையின்போது வழிக்காவல் செய்த செல்வி.எஸ்.முத்துலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் கட்ட புலன் விசாரணை செய்த சிவகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304–A ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(x) **அ.சா.10 சிவக்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** தான் 10.03.2022ம் தேதி பணியில் இருந்தபோது TN 33 AF 5431 என்ற TVS இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்ததாகவும், வாகனத்தின் முன் வலதுபுற கால்மிதி வளைந்திருந்தது என்றும், **TN 33 AF 5431 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.9** என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:24 +0530

6. **<u>எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவல்:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி வழக்கை பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என கூறியபொழுதும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் முன்னிறுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரி இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் எதிரி குற்றம்புரிந்துள்ளார் என்பதை அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரியை இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என அரசு தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

9. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது 18 வயது பூர்த்தி அடையாத அ.சா.2 தனது அம்மாவை இருசக்கர வாகனத்தின் பின் பக்கத்தில் அமர வைத்துக்கொண்டு ரோட்டை கடப்பதற்காக திடீரென அஜாக்கிரதையாக வாகனத்தை திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரி தனது பாதையில் தான் வாகனத்தை இயக்கி வந்தார் என்றும், எதிரி தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவன குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்கிற வகையில் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:34 +0530

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 24.10.2021ம் தேதி மாலை 15.30 மணியளவில் சிவகிரி – முத்தூர் மெயின்ரோட்டில் எல்லை மாகாளியம்மன் கோயில் அருகில் இறந்துபோன வெண்ணிலா தனது மகன் பரமேஸ்வரன் என்பவர் TN 33 AF 5431 TVS XL SUPER என்ற வண்டியை ஓட்ட வெண்ணிலா பின்னால் அமர்ந்தும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று எல்லை மாகாளியம்மன் கோயில் அருகில் திரும்புவதற்காக நின்றிருந்தபோது எதிரி TN 86 C 9856 YAMAHA FASCING என்ற வண்டியை மேற்கிலிருந்து கிழக்காக மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் விதமாக ஓட்டி சென்று முன்னால் நின்று கொண்டிருந்த TN 33 AF 5431 TVS XL SUPER வண்டியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தி பின்னால் அமர்ந்து சென்ற வெண்ணிலாவிற்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளாரா என்பதை அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

11. அ.சா.2 தனது முதல் விசாரணையில் "கடந்த 24.10.2021ம் தேதி TVS XL Super இருசக்கர வாகனத்தில் தானும் தனது அம்மா வெண்ணிலாவும் மகா காளியம்மன் கோவிலுக்கு சென்றதாகவும், தான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றதாகவும், தனது அம்மா வெண்ணிலா தனக்கு பின்னால் அமர்ந்து வந்ததாகவும், அன்று மதியம் சுமார் 03.30 மணியளவில் முத்தூர் – சிவகிரி ரோட்டில் எல்லைகாளியம்மன் ரோட்டிற்கு எதிர்புறத்தில் ரோட்டை கடந்து செல்வதற்காக நின்றுகொண்டிருந்ததாகவும், மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி முத்தூர் ரோட்டில் எதிரி அர்ஜுணன் ஒரு Yamaha வண்டியில் வேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து தங்கள் மீது மோதிவிட்டதாகவும், அந்த Yamaha வண்டியின் எண். TN 86 C 9856" என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் "சம்பவ சமயத்தில் தனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை" என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 அ.சா.2ன் தந்தை ஆவார். அ.சா.1 குறுக்கு விசாரணையில் "சம்பவம் நடக்கும்போது பரமேஷ்வரன் என்பவருக்கு வயது 10

இருக்கும் என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது விபத்தின்போது அ.சா.2க்கு ஓட்டுநர் உரிமம் இல்லாதது தெரிய வருகிறது.

12. அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "விபத்தில் இறந்தவரும், அவரது மகனும் கோவிலுக்கு செல்வதற்காக ரோட்டை கடக்க திரும்பினார்கள் என்றால் சரிதான் என்றும், அப்போது தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்தானது கிழமேல் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு பக்கம் 18 அடி தூரத்தில் நடைபெற்றுள்ளது தெரிய வருகிறது. எதிரி தரப்பில் கூறியதுபோல் எதிரி தனது பாதையில் வந்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் அ.சா.2 ஓட்டி வந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கை அறிக்கையான அ.சா.ஆ.9ல் "Right side driver foot rest bend" என குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் எதிரியின் வாகனத்திற்கான தணிக்கை அறிக்கையான அ.சா.ஆ.7ல் "FR panel scratched, Front centre panel mounting cut" என குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் கவனமாக பரிசீலனை செய்ததில் எதிரி தரப்பில் கூறியதுபோல் வாகனம் வலதுபுறம் திரும்பியபோது தான் விபத்து ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது.

13. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தனது முதல் விசாரணையில் "மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த ஒரு Yamaha Scooty இருசக்கர வாகனம் நல்ல ஸ்பீடாக வந்து ரோட்டில் நின்று கொண்டிருந்த அந்த பெண்மணிக்கு பின்புறமாக அடித்ததில் அந்த இரு நபர்களும் ரோட்டில் கீழே விழுந்துவிட்டார்கள்" என சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனனை செய்ததில் அ.சா.2 ஓட்டி வந்து வாகனத்திற்கு பின்புறம் சேதம் எதுவும் இல்லை என தெரிய வருகிறது. மேலும் அ.சா.5 ஆஜரில் உள்ள எதிரிதான் விபத்தின்போது விபத்தை ஏற்படுத்தினாரா என்று தனக்கு தற்போது ஞாபகம் இல்லை என சாட்சியமளித்துள்ளார். இவற்றை வைத்து பார்க்கும்பொழுது அ.சா.5ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை வலுப்படுத்தும் வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் அ.சா.2க்கு சம்பவ

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:44 +0530

சமயத்தின்போது 18 வயது பூர்த்தி அடையாமல் இருப்பதும், அ.சா.2 தனது வாகனத்தை வலதுபுறம் திருப்பியபோதுதான் விபத்து ஏற்பட்டது என்றும் எதிரி தனது பாதையில் தான் வாகனத்தை இயக்கி வந்தார் என முடிவு செய்து இருப்பதாலும் எதிரிமீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. இ.த.ச. பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றங்களை பொருத்து ஆராயும்போது அரசு தரப்பில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி கவனக்குறைவாக ஓட்டி வந்தார் என்றோ, மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவேண்டும். இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் எதிரி தகாத துணிச்சல் மற்றும் கவனமற்று ஓட்டியதாக கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபணம் செய்யவில்லை என்ற நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சரிவர நிரூபணம் செய்யாத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது உசிதமானது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15. எனவே எதிரிமீதான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 279, 304–A ன் கீழ் குற்றவாளி இல்லை என எதிரியை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:49 +0530

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்படவில்லை.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**:–

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஆறுமுகம் – புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.பரமேஷ்வரன் |
| அ.சா.3 | திரு.தங்கவேல் |
| அ.சா.4 | திரு.சூர்யபிரகாஷ் |
| அ.சா.5 | திரு.ப்ராண்கிளின் |
| அ.சா.6 | திரு.சண்முகசுந்தரம் |
| அ.சா.7 | திரு.ஜெகநாதன் |
| அ.சா.8 | திரு.தமிழ்செல்வன் |
| அ.சா.9 | திரு.முருகன் – காவல் ஆய்வாளர் |
| அ.சா.10 | திரு.சிவக்குமார் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.10.2021 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 26.10.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 25.10.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 26.10.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 28.10.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:27:57 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 28.10.2021 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 08.11.2021 | TN 86 C 9856 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |
| அ.சா.ஆ.8 | 29.10.2021 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 10.03.2022 | TN 33 AF 5431 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:– – இல்லை –

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –**

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>C.C.No.130/2022</u>**

| S.No | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE<br>**Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Inspector of Police, Sivagiri Police Station, Crime No.198/2021 Under Section 279, 304-A of IPC |
| 2 | Name | Arjunan |
| 3 | Father's Name | Kumarasamy |
| 4 | Occupation | Labourer |
| 5 | Residence | 15 Vttuvapalayam, Sivagiri Post, Erode Dt. |
| 6 | Age | 57/2021 |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:12 +0530

| | | |
|---|---|---|
| 7 | Date of Occurrence | 24.10.2021 |
| 8 | Date of Complaint | 25.10.2021 |
| 9 | Date of Apprehension | 02.11.2021 |
| 10 | Date of Release on bail | Station Bail on 02.11.2021 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 27.04.2023 |
| 13 | Date of Closure of trial | 03.01.2026 |
| 14 | Date of Sentence or Order | 27.03.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.